DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE/
SUBORDINATE JUDGE, MANAMADURAI

| | |
|---|---|
| Case No. | S.C.No. 113/2022 |
| Police Station | Manamadurai PS |
| Deposition of Witness for | LW.3 /PW.4 |
| Name | லெட்சுமணன் |
| Father's/Husband's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

**A1 to A4 Absent. Petition filed and allowed.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 17.09.2025 at **12**.00 a.m

**முதல் விசாரணை:**

1 முதல் 4 எதிரிகளை எனக்கு தெரியாது. நான் தற்சமயம் மதுரை மாநகர் அவனியாபுரம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் பழையனூர் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணியில் இருந்த போது மானாமதுரை சித்திரை திருவிழா பந்தபஸ்து பணிக்காக பணிக்கப்பட்டு 02.05.2018 அன்று மானாமதுரை பழைய பேருந்து நிறுத்தத்தில் நானும், அழகுசுந்தரம் மற்றும் கண்ணன் ஆகியோர் பந்தபஸ்து பணியில் இருந்த போது இரவு 1 மணியளவில் இரண்டு இருசக்கர வாகனங்களில் வந்த 4 நபர்கள் அசிங்கமாக பேசி ரீப்பர் கட்டையால் என்னுடன் பணியில் இருந்த முதல் நிலை காவலர் அழகுசுந்தரத்தை பிடறியில் அடித்தார்கள். உடனே நானும் கண்ணனும் அவர்களை விரட்டி சென்றோம். அவர்கள் இருசக்கர வாகனத்தில் ஏறி சென்றுவிட்டார்கள். அழகுசுந்தரத்தை நானும் கண்ணனும் சேர்ந்து போலீஸ் ஜீப்பில் ஏற்றி மானாமதுரை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றோம். அங்கிருந்து அழகுசுந்தரத்தை மேல்சிகிச்சைக்காக சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். இந்த சம்பவம் சம்மந்தமாக அழகுசுந்தரம் புகார் கொடுத்தார். இந்த சம்பவம் சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

ஆய்வாளர் சம்பவம் நடந்த உடன் சம்பவ இடத்தில் வைத்து என்னை விசாரித்தார். அதன்பிறகு ஆய்வாளர் என்னை எந்த தேதியில் விசாரித்தார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. சம்பவம் நடந்த உடன் என்னை ஆய்வாளர் விசாரித்த போது எதிரிகளின் பெயர் எனக்கு தெரியாது. சம்பவம் நடந்த உடன் எந்த நபர் அழகுசுந்தரத்தை அடித்தார் என்று ஆய்வாளரிடம் பெயர் சொல்லவில்லை ஆனால் அடையாளம் கூறினேன். ஆய்வாளர் என்னை விசாரித்த போது எந்தெந்த இருசக்கர வாகனத்தில் யார் யார் வந்தார்கள் என்று நான் சொல்லவில்லை. அழகு சுந்தரத்தை தாக்கியதாக கூறப்படும் நபர் இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்தாரா அல்லது பின்னால் அமர்ந்து வந்தாரா என்று எனக்கு தெரியாது. பழைய பேருந்து நிறுத்தத்தில் நாங்கள் பணியில் இருந்த போது எதிரிகள் எந்த திசையிலிருந்து வந்தார்கள் என்று ஆய்வாளர் விசாரணையில் நான் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. பழையனூர் காவல் நிலையத்திலிருந்து மானாமதுரை காவல் நிலைய பணிக்கு வந்த போது எங்களுக்கு கடவுச்சீட்டு வழங்கினார்கள் என்றால் சரிதான். எனக்கு வழங்கப்பட்ட கடவுச்சீட்டை நான் ஆய்வாளரிடம் கொடுக்கவில்லை. சம்பவத்தன்று சித்திரை திருவிழா நிலாச்சோறு என்பதால் போக்குவரத்து மற்றும் மக்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கும் என்பதால் தான் கூடுதலாக எங்களையும் பாதுகாப்பு பணியில் அமர்த்தினார்கள் என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் சம்பவம் நடந்த இடமான பழைய பேருந்து நிலையம் அருகில் மக்கள் நடமாட்டம் அதிகமாக இருந்தது வாகன போக்குவரத்து அவ்வளவாக இல்லை. அழகுசுந்தரத்தை தாக்கியதாக சொல்லப்படும் நபர் ரீப்பர் கட்டையை மறைத்து வைத்திருந்தாரா கீழே கிடந்து எடுத்தாரா என்றால் மறைத்து வைத்திருந்தார் எங்கிருந்து எடுத்துவந்தார் என்று எனக்கு தெரியாது. எதிரி பயன்படுத்திய ரீப்பர் கட்டை பழைய ரீப்பர் கட்டையா புதியதா என்றால் பழையது ஆகும். எதிரி அழகுசுந்தரத்தை தாக்கிய உடன் ரீப்பர் கட்டையை சம்பவ இடத்தில் போட்டுவிட்டாரா அல்லது கொண்டுபோய்விட்டாரா என்றால் அந்த கட்டை இரண்டாக உடைந்து சம்பவ இடத்தில் கிடந்தது. ஆய்வாளர் என்னை விசாரித்த போது எதிரி பயன்படுத்திய ரீப்பர் கட்டை சம்பவ இடத்தில் இரண்டாக உடைந்து கிடந்ததாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. சம்பவம் நடந்து 10 நிமிடத்தில்

ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு வந்தார். ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு வந்த போது ரீப்பர் கட்டை சம்பவ இடத்தில் கிடந்தது. அங்கிருந்த ரீப்பர் கட்டையை காவல் நிலையத்திற்கு எடுத்துச்சென்றார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் சொன்ன தேதியில் சொன்ன விதத்தில் எதிரிகள் அழகுசுந்தரத்தை தாக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தினத்தன்று சம்பவ நேரத்தில் திருவிழா பார்த்துவிட்டு கூட்டமாக வந்த சில விஷமிகள் சத்தம் போட்டுக்கொண்டும் விசில் அடித்துக்கொண்டும் ஆரவாரம் செய்து ரோட்டில் போய்க்கொண்டிருந்தார்கள் என்றும் அவர்களை கலைந்து அமைதியாக செல்லுமாறு பணியில் இருந்த நாங்கள் விரட்டியபோது தடுமாறி அழகுசுந்தரம் மல்லாந்து விழுந்து தலையின் பின்பக்கம் அடிபட்டது என்றும் மேற்படி காயத்தை வைத்து சந்தேகத்தின் அடிப்படையில் எதிரிகள் மீது பொய் புகார் பெறப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. அழகுசுந்தரத்திற்கு ஏற்பட்ட காயத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. காயம்பட்ட நபர்காவல் துறையை சேர்ந்தவர் என்பதால் பொதுஇடத்தில் தாமாக விழுந்து ஏற்பட்ட காயத்திற்கு ஏதாவது காரணம் சொல்லவேண்டும் என்ற நிலையில் பொய்யாக எதிரிகள் தாக்கியதாக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. புகார்தாரர் காவல் துறையை சார்ந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக நடக்காத சம்பவத்தை நடந்தது போல பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2 முதல் 4 எதிரிகள் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

உதவி அமர்வு நீதிபதி

**மானாமதுரை**